# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2018

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 9

சுட்டெண்: | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 5 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. உலகின் முதன்மொழி தமிழ் என்று நிறுவியவர்

அ) திருவள்ளுவர் ☐ ஆ) தொல்காப்பியர் ☐

இ) தேவநேயப்பாவாணர் ☐ ஈ) பாவேந்தர் ☐

2. **'ஐ'** என்ற உயிர்எழுத்தின் இனவெழுத்து

அ) ஏ ☐ ஆ) உ ☐

இ) ஊ ☐ ஈ) இ ☐

3. போர்த்துக்கேயர் எமதுமண்ணில் காலூன்ற எடுத்த முயற்சிகளை முதலாம் சங்கிலி மன்னன் முறியடித்த இடம்

அ) மன்னார் ☐ ஆ) யாழ்ப்பாணம் ☐

இ) கதிரமலை ☐ ஈ) பூநகரி ☐

4. **'புதியதொரு வீடு'** நாடகத்தில் நண்டு_____________ படம் கீறியது.

அ) மணலில் ☐ ஆ) புல்வெளியில் ☐

இ) கடலில் ☐ ஈ) வயலில் ☐

5. **'விடிஞ்சிட்டுது'** என்ற பேச்சுவழக்குச் சொல்லை செவ்வழக்காக மாற்றினால்

அ) விடிந்திட்டு ☐ ஆ) விடிஞ்சிட்டு ☐

இ) விடிந்துவிட்டது ☐ ஈ) விடிஞ்சுவிட்டது ☐

6. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ) திங்கள் ☐　　ஆ) நிலா ☐

இ) பகலவன் ☐　　ஈ) மதி ☐

7. இவ்வுலகிற்கு அச்சாணியாக விளங்குபவர்

அ) வணிகர் ☐　　ஆ) உழவர் ☐

இ) புலவர் ☐　　ஈ) மீனவர் ☐

8. அறிஞர் என்பதன் விகுதி

அ) அறி ☐　　ஆ) அர் ☐

இ) ஞ் ☐　　ஈ) ஞர் ☐

9. விசயன் வருவதற்கு முன்னரே இலங்கையின் தென்பகுதிகளில் பேரரசுகளை அமைத்தவர்

அ) நாகர் ☐　　ஆ) இயக்கர் ☐

இ) சிங்களவர் ☐　　ஈ) ஒல்லாந்தர் ☐

10. தனிநாயகம் அடிகளாரின் இயற்பெயர்

அ) வரதன் ☐　　ஆ) சேவியர் ☐

இ) மயில்வாகனன் ☐　　ஈ) தேவநேசன் ☐

11. 'நிறைகுடம் தளம்பாது' என்ற இப்பழமொழியின் கருத்து

அ) எல்லை கடத்தல் ☐

ஆ) அறிவின் அடக்கம் ☐

இ) சிறிதின் பெருமை ☐

ஈ) வீண்பெருமை ☐

12. 1979 ஆம் ஆண்டு அமெரிக்கப் பென்சில்வேனியப் பல்கலைக்கழகம் __________ அகழ்வாய்வுகளை மேற்கொண்டது.

அ) கந்தரோடையில் ☐ ஆ) பூநகரியில் ☐
இ) வன்னியில் ☐ ஈ) கொழும்பில் ☐

13. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பவை

அ) நாற்குணம் ☐ ஆ) நாற்படை ☐
இ) நானிலம் ☐ ஈ) நான்மறை ☐

14. வாரணம் என்பது

அ) இயற்சொல் ☐ ஆ) வடசொல் ☐
இ) திசைச்சொல் ☐ ஈ) திரிசொல் ☐

15. **"மகாவம்சம் வரலாற்று நூலல்ல"** எனக் குறிப்பிட்டவர்

அ) ஈ.டபிள்யூ அதிகாரம் ☐ ஆ) லயனல் சரத் ☐
இ) டி. அல்மெய்டா ☐ ஈ) சிறிலால் கொடிகார ☐

16. **ஓங்கிய கோல் கண்டு ஓடிய என் மகனா?** இதில் கோல் என்பது

அ) தடி ☐ ஆ) வாள் ☐
இ) வேல் ☐ ஈ) அம்பு ☐

17. விளிப்பொருளை உணர்த்துவது

அ) இரண்டாம் வேற்றுமை ☐ ஆ) எட்டாம் வேற்றுமை ☐
இ) நான்காம் வேற்றுமை ☐ ஈ) ஆறாம் வேற்றுமை ☐

18. சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும் வினாவெழுத்து

அ) யா ☐ ஆ) எ ☐
இ) ஓ ☐ ஈ) ஏ ☐

19. கார்காலத்தில் வீசும் காற்று

அ) கோடை ☐ ஆ) வாடை ☐

இ) தென்றல் ☐ ஈ) கொண்டல் ☐

20. **கூரிருள் கழிய சேவல்கள் கூவின.** இச்சொல்லியத்தில் **கூவின** என்பது

அ) பெயர்ச்சொல் ☐ ஆ) உரிச்சொல் ☐

இ) இடைச்சொல் ☐ ஈ) வினைச்சொல் ☐

21. மூன்றாம் வேற்றுமை உருபிற்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) ஐ ☐ ஆ) ஆல் ☐

இ) அது ☐ ஈ) இன் ☐

22. நந்திக்கலம்பகம் ஒரு

அ) அறஇலக்கியம் ☐ ஆ) பக்தி இலக்கியம் ☐

இ) காப்பிய இலக்கியம் ☐ ஈ) சிற்றிலக்கியம் ☐

23. '**பளிங்கு போன்ற மனம்**' என்ற உவமை அணியின் உவமானம்

அ) மனம் ☐ ஆ) பளிங்கு ☐

இ) போன்ற ☐ ஈ) தெளிவு ☐

24. பின்வருவனவற்றுள் அடுக்குத்தொடர்

அ) பெரியபெரிய ☐ ஆ) பெண்ணம்பெரிய ☐

இ) கலீர்கலீர் ☐ ஈ) கன்னங்கரிய ☐

25. சங்கிலி மன்னனின் சிலை அமைந்துள்ள இடம்

அ) மூதூர் ☐ ஆ) நல்லூர் ☐

இ) உடையாவூர் ☐ ஈ) ஏறாவூர் ☐

26. **பைங்கிளி** என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

அ) பய் + கிளி ☐ ஆ) பைங் + கிளி ☐

இ) பசுங் + கிளி ☐ ஈ) பசுமை + கிளி ☐

27. ஐம்புலன்களில் ஒன்று

அ) சுவை ☐ ஆ) வாய் ☐

இ) கண் ☐ ஈ) காது ☐

28. **'இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும்'** என்ற நூலை எழுதியவர்

அ) சாவோ ☐ ஆ) கோமர் ☐

இ) சேக்ச்பியர் ☐ ஈ) அல்பேர்ட் சுவைட்சர் ☐

29. **'பனையினது கிழங்கைப் பிளந்தது'** போன்ற கூரிய அலகையுடையது

அ) கிளி ☐ ஆ) வாத்து ☐

இ) நாரை ☐ ஈ) புறா ☐

30. இலங்கைக்கு இறுதியாக வந்த ஐரோப்பியர்

அ) பிரான்சியர் ☐ ஆ) ஆங்கிலேயர் ☐

இ) ஒல்லாந்தர் ☐ ஈ) போர்த்துக்கேயர் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

நீர் இயற்கையின் வியப்பான படைப்புகளில் ஒன்று. நமக்கு நீர் பெரும்பாலும் ஆறு, குளம், ஏரி, கிணறு முதலியவற்றின் மூலமே கிடைக்கின்றது. இவற்றிற்கு மழை அடிப்படையாக விளங்குகிறது. பண்டைக்காலத்தில் நீரைக் கொடையாகக் கொடுப்பதை நற்செயலாக மக்கள் கருதினர். அதனால் தண்ணீர்ப்பந்தல், தாவளம் போன்றவற்றை அமைத்து நீரை வழங்கித் தாகம் தீர்த்தனர். புடவியின் எல்லா வளங்களும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை. இவற்றில் ஏதாவது ஒன்று தடைப்படும் போது எல்லா உயிரினங்களுக்கும் ஏதோ ஒரு வகையில் தாக்கம் ஏற்படுகிறது. நீர்வளம் மிகுந்த நாடே சிறந்த வளம் மிக்க நாடாக விளங்கும். நீர் தனி மாந்தருக்கோ தனி இனத்திற்கோ, தனி நாட்டிற்கோ உரியதன்று. மழைநீரை யாரும் உரிமை கொண்டாட முடியாது. உயிரினங்கள் அனைத்திற்கும் நீர் பொதுவானதாகும். நீரைச் சேமிப்பதும் காப்பதும் நம் கடமைகளாகும்.

1. நம் கடமைகள் எவை எனக் கூறப்பட்டுள்ளன ?

 __________________________________________

 __________________________________________

2. பண்டைக்காலத்தில் எவற்றை அமைத்து நீரை வழங்கினர்?

 __________________________________________

 __________________________________________

3. நமக்கு நீர் பெரும்பாலும் எவற்றில் இருந்து கிடைக்கின்றது? ஏதாவது இரண்டு தருக.

 __________________________________________

 __________________________________________

4. பண்டைக்காலத்தில் எதை நற்செயலாகக் கருதினர்?

 __________________________________________

 __________________________________________

5. எது சிறந்த நாடாக விளங்குகின்றது?

 __________________________________________

 __________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. **'புதியதொரு வீடு'** என்ற நாடகத்தை எழுதியவர் யார்?

2. தனிநாயகம் அடிகளார் வெளியிட்ட இதழ்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

3. பெருங்கற்கால மக்களின் தொழில்கள் இரண்டினைத் தருக.

4. அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்

   என்பும் உரியர் பிறர்க்கு

   இக்குறளின் பொருளைத் தருக.

5. **"மாற்றானுக்கு மண்டியிட்டு வாழ்வதை விட மரணத்தை மேலென மதிப்பது எம் இனம்"** இது யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

6. **'கோவேத'** என்ற எழுத்துப் பொறிக்கப்பட்ட முத்திரை எங்கே கண்டெடுக்கப்பட்டது?

7. அல்பேர்ட் சுவைட்சரை மிகவும் கவர்ந்த நூல் எது?

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

# உழைப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| சிறுமைகள் | உரிமைகள் | சேர்ப்பதற்கு | செய்யும் | பார்த்த |

வறுமையை ஒழிப்பதற்கு
வளத்தினைப் பெருக்கிடுவோம்
உறுபுகழ் ____________
உயர்வழி சென்றிடுவோம்
எறும்பினைப் ____________ பின்னும்
எழுப்பிட வேண்டுமென்றால்
____________ யாவும் நம்மைச்
சிரிப்பதில் தவறே இல்லை

கடலலை போல நெஞ்சில்
கருத்தலை வீச வேண்டும்
கடமையைச் ____________ போது
கதிரவன் நாண வேண்டும்
உடைமைகள் யாவர்க்கும் என்னும்
____________ பெருக வேண்டும்
மடமையை வெட்டிச் சாய்த்து
மணிமுடி சூடுவோமே!

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. நின்றான் என்ற சொல்லைப் பகுத்து எழுதுக.

______________________________

2. பின்வருவனவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

அகச்சுட்டு ____________

புறவினா ____________

குறிப்புவினை ____________

3. சொற்பொருள் தருக.

கோ ____________ சிறார் ____________

திரு ____________ என்பு ____________

கமழ்வு ____________ நெறி ____________

4. **இனியவன் நோயினால் நனி வருந்தினான்.** இச்சொல்லியத்தில் இடம் பெற்றுள்ள பெயர், இடை, உரிச் சொற்களைத் தருக.

பெயர்ச்சொல் ____________

இடைச் சொல் ____________

உரிச் சொல் ____________

5. பின்வரும் சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.

விடாமுயற்சி ____________

இரவும் பகலும் ____________

வெற்றி ____________

புள்ளிகள் 15

## 6) பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Thirukonamalai
15.05.2018
Dear Amma,

Received your letter. I read everything. You wrote that in Jaffna it is continuing to rain. Are you all keeping well? In Thirukonamalai too, it is continuing to rain. There is a annual programme in my school which will be held on 12.06.2018. I am going to act as king Sankiliyan in Sankiliyan drama. So You, Appa and younger brother must come here. When annual programme finishes , there is a week's school holiday , so I will be coming to Jaffna with you.

Your loving son
Senthuran

Trincomalee
15.05.2018
Cara mamma,

ho ricevuto e letto la tua lettera. Hai scritto che a Jaffna continua a piovere. Voi state bene? Anche a Trincomalee continua a piovere. Nella mia scuola il 12.06.2018 si svolgerà la celebrazione dell'anniversario della scuola. In questo evento reciterò in una commedia e interpreterò il re Sangiylian. Perciò mi farebbe piacere che anche tu, papà e il fratello foste presenti. Conclusasi la celebrazione / dopo la celebrazione ci sarà una settimana di vacanza in cui tornerò a Jaffna.

Con affetto
il tuo caro figlio
Senthuran

Trincomalee
15.05.2018
Liebe Mama,
ich habe Ihren Brief erhalten. Beim Durchlesen habe ich alles erfahren. Sie haben geschrieben, dass es in Jaffna durchgehend regnet. Geht es Euch allen gut? In Trincomalee regnet es auch ununterbrochen. Am 12.06.2018 findet an meiner Schule die Jubiläumsfeier statt. Bei dieser Feier werde ich im Sangiliyan Theaterstück den König Sangiliyan spielen. Deswegen sollten Sie, Vater und kleiner Bruder unbedingt hierherkommen. Da nach der Jubiläumsfeier eine Woche Schulferien sind, werde ich mit euch nach Jaffna kommen.

Liebe Grüße
Sohn
Senthuran

Thirukonamalai
15.05.2018
Kära mamma,

Jag fick ditt brev. Jag läste och skaffade kännedom om allt. Du skrev att det fortsätter att regna i Yalpanam. Mår ni alla bra? I Thirukonamalai fortsätter det också att regna. I min skola är det jubileum den 12.06.2018. På det firandet ska jag spela kung "Sangiliyan" i Sangiliyandramat. Därför måste du, pappa och lillebror komma hit. Eftersom vi får en veckas skollov efter jubileet kommer jag till Yalpanam med er.

Mvh
Kära son
Senthuran

TTrincomali

Thirukonamalai
15.05.2018
Kjære mor!
Fikk brevet ditt. Jeg leste alt sammen. Du skrev at det fortsetter å regne i Jaffna. Har dere det bra alle sammen? Det fortsetter å regne i Thirukonamalai også. Det er et årlig arrangement på skolen min som skal holdes 12.06.2018. Jeg skal spille kong Sankiliyan i dramaet Sankiliyan. Så du, far og lillebror må komme hit. Når det årlige arrangementet (programmet) er over, er det en ukes skoleferie, så jeg vil dra til Jaffna med dere.

Din kjære
sønn
Senthuran

Tringo
15-05-208

Lieve mama,

ik heb u mail ontvangen. Ik heb alles gelezen. U heeft geschreven dat het veel regent in Jaffna. Gaat alles goed met jullie? In Tringo regent het ook constant. In mijn vindt op 12-06-2018 de jaarlijkse feest plaats. In de voorstelling ben ik de koning Sangilian van het Singaleese rijk. Ik zou graag willen dat jij samen met papa komt kijken. Daarna heb ik een week vrij en kan ik met jullie mee naar Jaffna.

Groetjes,
jullie zoon
Senthuran

Thirukonamalai
15.05.2018
Chère Maman,

J'ai reçu votre lettre. J'ai tout lu. Vous avez écrit qu'il continuait à pleuvoir à Jaffna. Allez-vous tous bien ? A Thirukonamalai aussi, il continue à pleuvoir. Le 12.06.2018, il y a l'événement annuel de mon école qui se déroule. Je vais jouer le rôle du Roi Sankiliyan dans la pièce de théâtre de Sankiliyan. Donc vous, papa et petit-frère, devez obligatoirement venir à l'évènement. À la fin de l'évènement annuel, il y a une semaine de vacances, donc je vendrai à Jaffna avec vous.

Ton cher fils
Senthuran

**புள்ளிகள் 05**

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ புலவரும் வறுமையும்
- ✸ நூலகம்
  - ➢ நூலகம் என்றால் என்ன?
  - ➢ அங்கே உள்ள நூல்கள்; அவற்றின் சிறப்புகள்
  - ➢ உமது கல்விக்கு நூலகம் எவ்வாறு உதவுகின்றது?
  - ➢ மக்களின் அறிவு வளர்ச்சிக்கு நூலகத்தின் பங்களிப்பு
- ✸ பொழுதுபோக்கு
  - ➢ பொழுதுபோக்கு என்றால் என்ன?
  - ➢ பயன்தரும் பொழுதுபோக்குகள்
  - ➢ பொழுதுபோக்கினால் ஏற்படும் நன்மைகள்
  - ➢ நீர் விரும்பும் பொழுதுபோக்கு எது? ஏன்?

புள்ளிகள் 20